**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**நாள். 25.03.2026.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 68/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம் உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேட்டு | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | எல்லப்பன் | வயது | : | 51 |
| ஊர் | : | சிறுவேலியநல்லூர் | தொழில் | : | விவசாயம் |

**பி.வா.சா. 1 (சேட்டு) : வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. வழக்கு தாவா சொத்துக்கள் அ அயிட்ட சொத்தானது வாதிக்கும், ஆ அயிட்ட சொத்தானது வாதிக்கும் எனக்கும் சொந்தமாகும். மேற்படி சொத்துக்கள் வரப்புகளாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களில் 9, 10 வரப்புகள் இருக்கும் என்றால் சரிதான். தாவா அயிட்ட சொத்துக்களில் வாதி பிரதிவாதி நிலங்கள் கலந்துள்ளது என்றால் சரிதான். வாதியின் அ அயிட்ட சொத்திலிருந்து அதில் ஒரு பகுதியில் இருந்து அடுத்த கோடியில் இருக்கும்வாதியின் மற்றொரு அ அயிட்ட சொத்திற்கு என்னுடைய ஆ அயிட்ட சொத்தில் இருந்து செல்ல முடியும் என்று சொன்னால் சரிதான். பயிர் வைக்கும் காலத்தில் கூட ஒருவர் நிலத்தின் மேல் மற்றொருவர் கதிர் அறுக்கும் இயந்திரத்தை எடுத்துச் செல்ல நான் தடை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது பொய் என்றும் நான் கதிர் அறுக்கும் இயந்திரத்தை எடுத்துச் செல்வதை தடுப்பதால்தான் இந்த வழக்கு என்று சொன்னால் நான் என்னுடைய நிலம் காலியாக இருக்கும்போது அவர் எடுத்துச் செல்வதற்கு தடை செய்யவில்லை, ஆனால் நான் பயிர் வைக்கும் காலத்தில் எடுத்துச் செல்வதைதான் தடை செய்கிறேன். அதேபோல் டிராக்டரை உழுவதற்காக எடுத்துச் செல்வதை நான் தடை செய்கிறேன் என்றால் சரியல்ல.

2. அப்போது வாதியானவர் என் நிலத்தின் வழியாக டிராக்டரை உழவு செய்ய எடுதகுச் செல்லும்போது நான் தடை செய்யமாட்டேன் என்றால் சரிதான். நான் தடை செய்ததால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது பொய்யாகும். கிராமத்தில் பொதுவாக அனைவரும் ஒரே நேரத்தில்தான் பயிர் செய்வார்கள் என்று சொன்னால் அது மாறுபடும். வழி இருக்கும்போது பயிர் தள்ளி வைப்பார்கள். வழி இல்லாதவர்களுக்கு முன்னரே பயிர் வைத்துக்கொள்வார்கள். வழி இல்லாதவர்கள் முதலிலும் வழி வைத்துள்ளவர்கள் பின்னர்தான் பயிர் செய்வார்கள். ஒரே பகுதியில் அனைவரும் ஒரே நேரத்தில்தான் பயிர் வைத்து ஒரே நேரத்தில்தான் அறுவடையும் செய்வார்கள் என்றால் சரியல்ல. என் நிலத்தில் பயிர் இருக்கும்போதுதான் நான் வாதியை டிராக்டர் எடுத்துச் செல்லவும் கதிர் அறுக்கும் வண்டியை தடை செய்தேன் என்று சொன்னால் சரிதான். ஒரே நேரத்தில் வாதியும், நானும் வழக்கு சொத்தில் பயிர் செய்து அறுவடை செய்தோம் என்றால் எங்களுக்கு பிரச்சனை இருக்காது என்று சொன்னால் சரிதான்.

3. அ, ஆ அயிட்ட சொத்துக்களில் ஒரு கிணறும் ஒன்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணறானது 9, 10 வரப்புகள் இல்லாமல் தனியாக இருக்கிறது என்றால் சரிதான். ஆனால் அ, ஆ அயிட்ட சொத்துக்களில்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் மின இணைப்பு இல்லை என்றும் டீசல் எஞ்சின் வைத்துதான் அனைவரும் தண்ணீர் இறைத்துக்கொள்கிறார்கள் என்றால்

சரிதான். எனக்கும் வாதிக்கும் தனிததனியாக ஆயில் எஞ்சின் உள்ளது. நாங்கள் தனியத்தனியாக எங்கள் எஞ்சின் மூலம் இறைத்துக்கொள்கிறோம் என்றால் சரிதான். மேற்படி கிணற்றிற்கு செல்லவேண்டும் என்றால் நான் ஆ செட்யுல் சொத்திலிருந்து அ அயிட்ட சொத்து வழியாக செல்லவேண்டும் என்றும் அதேபோல் வாதி அ செட்யுல் சொத்திலிருந்து ஆ அயிட்ட சொத்து வழியாக செல்லவேண்டும் என்றால் சரிதான். தாவா அ, ஆ அயிட்ட சொத்திற்கு இடையே கால்வாய் உள்ளது என்றால் சரிதான். கால்வாயானது இருபக்கமும் கரை 1 அடி அகலம் இருக்கும். கால்வாய் 1 அடி அளவு இருக்கும். மேற்படி கரையானது தற்போது உள்ளபடியேதான் எப்போதும் இருந்தது. கால்வாய்க்கு பக்கத்தில் பொதுவாக சென்று வர வழி இருந்ததா என்றால் இல்லை. நான் இருந்த கால்வாயை மொத்தமாக 1 அடியாக குறுக்கிவிட்டேன் என்றால் சரியல்ல. அப்படியேதான் உள்ளது.

3. பொதுவாக கிராமத்தில் பயிர் வைப்பவர்கள் மற்றவர்களின் நிலத்தின் வழிதான் சென்று வருவார்கள் என்றும் விவசாய கருவிகளை எடுத்துச்செல்வதும் வழக்கம் என்று சொன்னால் சரிதான். ஆனால் அதற்காக பயிர் மேல் எடுத்துச் செல்லக்கூடாது. நான்சொல்வது பொய் என்றும் வாதியானவர் பயிர் இல்லாத நேரத்திலும் என் சொத்திலும் டிராக்டர் எடுத்துச்செல்வதை நான் தடுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு என் சொத்தின் மீது சென்றுவர வழி உரிமை இருக்கிறது (Easmentary right) என்று சொன்னால் சரிதான். எனக்கும் உரிமை இருக்கிறது. வாதியின் வழி உரிமையை தடை செய்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் சென்று வருவதை வாதி தடுக்கக்கூடாது என்றும், வாதி சென்று வருவதை நான் தடுக்கக்கூடாது என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது)**

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.03.25 18:21:53 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு